விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 சித்திரை 19 றப்ழான் பிறை 3 இதழ் 72

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 2-5 1987

## இலங்கையில் இராணுவ பலத்தை நிலைநாட்ட அமெரிக்கா முயல்கிறது!

### சோவியத் தூதராலயம் குற்றச்சாட்டு

(கொழும்பு, வெள்ளி

இலங்கை இனப்பிரச்னையை ஒரு சாட்டாகப் பயன்படுத்தி அந்தப்பகுதியில் தனது ராணுவ பலத்தை நிலைநாட்டிக் கொள்ள அமெரிக்கா முயற்சி செய்கிறது என்று கொழும்பில் சோவியத் தூதராலயத்தில் வெளியிடப்பட்ட அறிக்கை குற்றம் சாட்டியுள்ளது.

போராளிகளுக்கு சோவியத் யூனியன் ஆயுதங்கள் கொடுத்துதவுவதாக சில மேற்கத்தேயப் பத்திரிகைச் செய்திகளை மறுத்துரைத்து வெளியிடப்பட்டுள்ள இவ் அறிக்கையில் இந்தக் குற்றச் சாட்டுக்கள் இத்தகைய சக்திகளின் தீய நோக்கைப் புலப்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்துமாகடல் பகுதியில் திருமலை துறைமுகத்தை கடல் தளமாக அமைத்து கொள்ள அமெரிக்கா முயல்வதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையில் 'வாயிஸ் ஒப் அமெரிக்கா' நிறுவனத்தை அமைப்பது குறித்தும் சோவியத் யூனியன் தனது ஆழ்ந்த கவலையை தெரிவித்துள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க)

# புலிகளின் மேதின ஊர்வலம் யாழ்நகரில்வரலாறுபடைத்தது

## புலிக்கொடியுடன் பல்லாயிரம் மக்கள் அணிதிரண்டனர்

(என். கே. துரைசிங்கம்)

உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் உலகளாவிய திருநாளான மே தின ஊர்வலத்திற்கும், கூட்டங்களுக்கும் அரசாங்கம் தடை விதித்திருந்த போதும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய மேதின ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் யாழ். நகரம் இது வரையில் கண்டிராத வகையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் உரும்பராய் சந்தியிலுள்ள தியாகி சிவகுமாரன் சிலையருகிலிருந்து இந்த ஊர்வலம் ஆரம்பமானது. பெண்கள், சிறுவர்கள். இளைஞர்கள், முதியோர்கள் உட்

(5-ம் பக்கம் பார்க்க)

### ஜே. ஆரின் கருத்துகுறித்து இந்தியா பலத்த கண்டனம்

புதுடில்லி மே 1.

இலங்கை இனப்பிரச்னை விவகாரத்தில் இந்தியாவின் நிலை குறித்து அண்மையில் ஜனாதிபதி ஜெயவர்த்தன வெளியிட்ட கருத்துக்களுக்கு இந்தியா தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

மேற்படி இந்தியாவின் கண்டனத்தை இந்திய வெளிவிவகார செயலர் திரு. கே. பி. எஸ். மேனன் இன்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் திரு. பேர்னுட் திலகரெட்னவிடம் தெரிவித்தார்.

திரு. மேனன் மேலும் தெரி

5-ம் பக்கம் பார்க்க)



நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் நேற்று நடந்த புலிகளின் மேதின கூட்டத்தில் திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தில் ஒரு பகுதியினர்.
- (படம்: 'தேவா')

### அரசு அடக்குமுறைகளால் தமிழரை அடிமைபடுத்த முடியாது – தளபதி கிட்டு

(அலுவலக நிருபர்)

"தமிழ் மக்களை அரசு அடக்குமுறைநடவடிக்கைகளாலும் அடாவாடித்தனங்களாலும் அடிபணியவைக்க முடியாது என்பதனை தமிழீழ மக்கள் நிரூபித்துவிட்டார்கள்."

நல்லூரில் நேற்று நடந்த புலிகளின் மேதினக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் இயக்க யாழ். மாவட்டத்தளபதி திரு. கிட்டு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல் பிரிவு பொறுப்பாளர் திலீபன் தலைமையில்நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு கிட்டு மேலும் பேசுகையில் கூறியதாவது:

இராணுவத்தைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் எமது போராட்டத்தை மழுங்கடிக்கச்செய்யலாம் என்றுஸ்ரீலங்கா

(5ம் பக்கம் பார்க்க)



### "உறுதிப்பாட்டை உலகிற்கு காட்டியுள்ளோம்"

யாழ்ப்பாணம், சனி.

"உலக உழைப்பாளிகளின் உன்னதமான தினமான இம் மே தினத்தில் நாம் ஓர் மாபெரும் பேரணியை நடாத்தி எமது ஒன்றுதிரண்ட சக்தியை எமது வீறு கொண்ட எழுச்

(6-ம் பக்கம் பார்க்க)



### "கூட்டணிக்கு ஏற்பட்டது போல அமைச்சர் தொண்டாவை விரைவில் மலையக மக்கள் தூக்கி எறிவார்கள்" – பரா

(மு. வாமதேவன்)

தமிழர் விடுதலைக் கூட்டணியினரை வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் அரசியலிலிருந்து தூக்கி எறிந்ததுபோல், மலையக மக்கள் அமைச்சர் கொண்டமானைத் தூக்கி எறியும் நாள் வெகுதூரத்தில் இல்லை',

ஈழவர் முன்னணியினரால் நேற்று நடாத்தப்பட்ட மேதின ஊர்வலத்தை அடுத்து நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய ஈழப்புரட்சி அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு பரா மேற்கண்டவாறு கூறினர்.

சுன்னாகம் மத்திய சந்தை மைதானத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

ஆயிரக்கணக்கில் தொழிலாளர், பாட்டாளி வர்க்கத்தினர் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை திரண்டிருந்தனர்.

#### ஈழ தேசிய கீதம் இசைக்கப்பட்டது

கூட்ட ஆரம்பத்தில் ஈழ தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் முதல் முறையாக சர்வதேச தொழிலாளர் கீதமும் இசைக்கப்பட்டது.

திரு. பரா அங்கு பேசுகையில் கூறியதாவது: மேதினத்தை உண்மையில் கொண்டாட வேண்டியமலையக மக்கள் இன்று மேதினத்தைக் கொண்டாட முடியாதவாறு அமைச்சர் தொண்டமான் இணைந்திருக்கும் ஜே. ஆர். அரசு தடைவிதித்துஅளது

"ஈழமக்களின் அபிலாஷை

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

திருமண அழைப்பிதழ்களும் திருமண வாழ்த்துமடல்களும், திருமண ஆண்டு நிறைவு வாழ்த்து மடல்களும், பிறந்த நாள் வாழ்த்து மடல்களும், சகல விலைகளிலுமான முத்திரைவகைகளும், வான் கடித உறைகளும் மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ள: அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001.

சி-8001

வீட்டுத்தளபாடங்கள், அல்மாரிகள், கட்டில்கள், மெத்தைகள், சாப்பாட்டு மேசைகள், எழுதுமேசை, Show Case, Belling oven, கடைக் கவுண்டர், T V. Stand, கண்ணுடி அலுமாரிகள், கிளாஸ் வகைகள் எலக்ரிக் கேற்றல், Stereo Box றேடியோ, ஹோல் செற்கள் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென். பற்றிக்ஸ் சந்தியருகில்) (சி-8845)

உதவி ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான முற்றிலும் வினு விடைகளமைந்த கொழும்பு-10, ரோய் பிரசுரத்தாரின் வழிகாட்டிக் கைநூல் விற்பனையாகின்றது. கிடைக்குமிடம்:- மக்மிலன் புத்தகசாலை, இல. 3. பஸ் நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-8852)

பம்பாய் வெங்காய விதை விவசாயத் திணைக்கள சிபார்சின் முறைப்படி குளிரூட்டிய நிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டு விற்பனைக்கு உண்டு. குறைந்தது 3 கிலோ வாங்குவோருக்கு பம்பாய்ச் செய்கை க்கைநூல் இனமாக வழங்கப்படும். விலாசம்: ஸ்ரீமகள் ரேடர்ஸ்,158,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி 8426)

வெளிவந்துவிட்டது(க பொத] உயர்தரம் வகுப்புக்கான மூலவளதொழில்முறை இரசாயனம் 4வது திருத்திய பதிப்பு ஆசிரியர் தா. நாகரத்தினம் B. Sc[Cey] மொத்தமாகவோ or சில்லறையாகவோ நேரில் பெறவிரும்பின் ரி. திருச்செல்வநாதன், 195, 3rd Cross St. Jaffna சி-8646

National S I வீடியோ மிக்ஷர், J. V. C. G X. N70 E வீடியோ கமரா, Orien Portable வீடியோ டெக், Akai-M10 ஓடியோ கசற் டெக், Sony அம்பிளிபயர் விற்பனைக்குண்டு. (4 மணிக்குபின் பார்வையிடலாம்) 45, பழம் ரேட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-8843)

ரெலிவிசன் ரியூப், Flyback Transformer ரியூனர் Deck Re Converter, IC சன் ரான்சிஸ்ரர்கள், பெல்ற் ஓடியோ கெட் [மொத்தமாகவும் பெறலாம்] car றேடியோ மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ளவும். Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம். (சி 8858)

இருபாலை கோண்டாவில் வீதியில் பழனி கோயிலுக்கும் மில்லுக்கும் இடையில் 5½ பரப்புக் காணியும் இசுசு டிப்பர் லொறியும் விற்பனைக்குண்டு (காணி பிரித்துக் கொடுக்கப்படும்) விபங்களுக்கு R. பாலகிருஷ்ணன் இருபாலை ரேட் கோண்டாவில்

(சி 8873)

## விற்பனைக்கு

யூலை மாதம் நடைபெறவிருக்கும் 6ம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சைகுரிய பயிற்சி நூல். கணிதம்- தமிழ் இரண்டையும் உள்ளடக்கிய 15 பயிற்சிகள். விலை ரூபா 16/90. பூபாலசிங்கம், சிறீலங்கா, ஸ்ரீ சுப்பிரமணியம் ஆகிய புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம். வெளியீடு அஸ்ரன் பதிப்பகம், 166/1 ஆஸ்பத்திரி வீதி- யாழ்ப்பாணம். (சி 8877)

உதவி ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி, "பொது அறிவும் பொது உளச்சார்பும்" விலை ரூபா 49/50. 1984, 87ல் நடைபெற்ற பரீட்சை வினு - விடைப் பயிற்சிகளையும் உள்ளடக்கியது. பூபாலசிங்கம், சிறீலங்கா, ஸ்ரீ சுப்பிரமணியம் ஆகிய புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகப்பெற அஸ்ரன் பதிப்பகம், 166/1 ஆஸ்பத்திரி வீதி, யாம்ப்பாணம்.

(சி 8878)

National Refrigerator Capasity 2 6 cu. ft விற்பனைக்கு. உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி No 82 (164) கண்டி வீதி சுண்டுக்குளி.

(சி. 8886)

யாழ்ப்பாணக்கல்லூரியிலிருந்து 150 யார் தூரத்தில் சித்தன்கேணிக்குச்செல்லும் பிரதான வீதியில் ரேட்டுக் கருகாமையில் 2, 3/4 பரப்பு காணி உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: து. பாக்கியநாதன், சட்டத்தரணி, மூளாய் ரேட், வட்டுக் கோட்டை. (சி 8875)

## தேவை

எமது உள்நாட்டு/ வெளிநாட்டு கிளைகளில் வேலைசெய்யக் கூடிய "வெளிக்களப் பணியாளர்" உடன் தேவை.விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்ளவும். தகைமை G.C.E [O/L] ஆங்கிலத்தில் சித்தி, "ஹரிஹரன் என்டபிறைஸ்". 337, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. யாழ்ப்பாணம். [சி 8885]

Computer Key Board உடன் தேவை. 3-5-87 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி—மாலை 2 மணிக்குள் நேரில் வரவும். கனேசானந்தா சில்க்பலஸ், மின்சார நிலைய வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

சி-8856

பிரபல என்ஜினியரிங் நிறுவனமொன்றுக்கு மேசன்மாரும், கூலியாட்களும் தேவை. உடனே விண்ணப்பிக்கவும். விளம்பரஎண்: A 3963,மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்

(எ 3963)

## மணப்பந்தல்

லண்டனில் வேலை பார்க்கும் 31 வயது குடி, புகைத்தல் இல்லாத 12-ல் செவ்வாய்யுள்ள சைவ போசன, B Sc. இஞ்சினியர் மகனுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள பெற்றுர் I C.M.A. B.Sc, சித்தியடைந்த அழகான சைவ வேளாள பெண் பார்க்கிருர்கள். சாதகக் குறிப்பு, படிப்பு, சீதனம் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். விளம்பர இல:சி-8849, மே/பா,ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-8849)

## சேவை

மோட்டர், மின்விசிறி,ரெலிவிசன், வீடியோ டெக், பூஸ்ரர் ரான்ஸ்போமர்கள், Speaker உடன் வைண்டிங் செய்து கொடுக்கப்படும் விபரங்கட்கு: Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம். சி-8859

டி. வி. றேடியோ, மின்சார உபகரணங்கள் எதுவானுலும் திருத்திக்கொள்ள நாடுங்கள். டி.வி. கிளினிக், பலாலி வீதி, கோண்டாவில்டிப்போஅருகில் (திருத்தமான வேலை, நிதானமான கட்டணம்). (சி 8851)

## கல்வி

இந்தியக் கல்லூரிகளில் 6, 7, 8, 9, 10, 11; 12 B.A; B.Com: M. A.; M. Com; B. Sc ; M. Sc.; M. B. A.; Medical; Engineering, Agriculture, Tehnical கல்லூரிகளில் சேரவிரும்புவோர் தொடர்பு கொள்ளவும். "ஹரிஹரன் என்டபிறைஸ்", 337 பலாலிவீதி, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி 8821)

## பயிற்சிகள்

Radio-T.V., Aircondition, Refrigeration, வயறிங், வெல்டிங், பிளம்பிங், மோட்டார் மெக்கானிச , வைன்டிங்புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Eegineering Aid Hall, (ஆனைப்பந்தி சந்திக்கு அருகாமையில்). 328,நாவலர்வீதி, யாழ்ப்பாணம். சி 8831

## வகுப்புக்கள்

கம்பியூட்டர் கல்வி Computer Programming Basic ஆரம்பம்: 9-5-87. 2 மாதம் Unikco Computer Centre, (சுதுமலைச் சந்தி), மானிப்பாய். (சம்பியன் லேன் அருகாமை), கொக்குவில். சி-8884

## ஜோதிடம்

1987- 88 (பிரபவ)புதுவருட இராசிப் பலன்களும், மகாவிஷ்ணுவின் கலியுக கல்கி அவதாரமும் அடங்கியவை. ரூபா 4/- எங்கும் கிடைக்கும். நூலாசிரியர் (ஆத்மஜோதி தத்துவ ஞானம், ஜோதிட விஞ்ஞானம்) சத்தியதாஸன், காங்கேசன்துறை. [சி8879]

## விற்பனைக்கு
## பஸ் 29 ஸ்ரீ 7780

எமது சொந்தப் பாவனையில் உள்ள "ஸ்சுசூ" யேணி 1981 மொடல், 26 இருக்கைகளைக் கொண்டது. கேள்வி விண்ணப்ப மூலம் விற்பனைக்கு உண்டு. விண்ணப்ப முடிவுத் திகதி: 30-5-1987. விபரங்களுக்கு அலுவலகத்தில் தொடர்பு கொள்ச:-

பொது முகாமையாளர்,
பூநகரி
ப. நோ. கூ. சங்கம்,
பூநகரி.

(ஏ- 3966)

## மீண்டும் ரயில்சேவை

மன்னுர். வெள்ளி

கட்டையடம்பன்- முருங்கன் ரயில் பாதையில் வைக்கப்பட்ட குண்டு வெடித்து சேதமுற்ற பாதை தற்சமயம் செப்பனிடப்பட்டு தொடர்ந்து அனுராதபுரம் - தலைமன்னுர் ரயில்சேவை மீண்டும் நடைபெறுகின்றன.

சென்ஜோன் படைக்கு வாகனம்:

# யாழ். நகர ஆணையாளருக்கு டாக்டர் சுகந்தன் நன்றி

[பண்டத்தரிப்பு நிருபர்]

யாழ். நகரில் இடம்பெற்று வரும் குண்டுத் தாக்குதல்களினுலும் மற்றும் தாக்குதல்களினுலும் படுகாயமடைந்து உயிராபத்து நிலையில் இருக்கும் பொதுமக்களுக்கு உடனடியாக முதலுதவிச் சிகிச்சைகளை வழங்குவதற்கு வசதியாக சென். ஜோன் அம்புலன்ஸ் [சர்வதேச] படைக்கு வாகனம் ஒன்றை வழங்குவதற்கு யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவாஞானம் முன்வந்தமைக்கு படையின் வட பிரதேச ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடிமிக்க சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விரைந்து சென்று முதலுதவிச் சிகிச்சைகளை வழங்குவதற்கு இந்த வாகனம் பேருதவியாக இருக்குமென்றும், முதலுதவியாளர்கள் முதலுதவிச் சிகிச்சைகளை வழங்குவதற்கு 24 மணி நேரமும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் நேற்று யாழ். மாநகரசபை ஆணையாளருடன் நடாத்திய கலந்துரையாடலின்போது படையின் வடபிரதேச ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி தெரிவித்தார்.

இதேவேளை யாழ். மாநகர சபையின் சகல வட்டாரங்களிலும் இயங்கிவரும் முதலுதவிக்குழுக்களுக்கு தேவையான முதலுதவிச் சிகிச்சைப்பெட்டிகளையும் மற்றும் உபகரணகளையும் மாநகரசபையின் ஆணையாளர் வழங்கியுள்ளார். அத்துடன் மாநகரசபையைச் சேர்ந்த 30 ஊழியர்களுக்கு உடனடியாக முதலுதவிப் பயிற்சிகளை வழங்குவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதேவேளை நல்லூரிலுள்ள தியணைக்கும் படையின் தலைமை அலுவலகத்தில் முதலுதவியாளர்களுக்கும் பயிற்சிகளை வழங்கவும் ஒழுங்கள் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 51-வது நாள் நினைவஞ்சலி



செல்வி
செல்லப்பு
வசந்தாதேவி (சாந்தி)

மண்ணகம்:
20-10-1964

விண்ணகம்:
13-3-1987

எங்கள் குல ஏணியென ஏற்றிருந்தோம்- அந்தோ திங்கள் சடையோன் ஏற்றுவிட்டான் தன்னடி தனிலே.எம்மையெல்லாம் ஏங்க வைத்து இறைவனடி சேர்ந்து இன்று ஐம்பத் தொன்ருனுலும் எங்கள் இதயங்களில் நினைவொளிகள் ஏற்றிடுவோம்.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

பெற்றுேர், சகோதர
சகோதரிகள்,
உறவினர்கள்.

பாடசாலை வீதி,
(சொக்கதிடல்),
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

(சி8874)

## சைவாலய பரிபாலனசபைகள் உதவவேண்டும்

யாழ்ப்பாணம், வெள்ளி

சைவசமய நூல்களை ஆக்குவோருக்கு ஆலய பரிபாலன சபைகள் உதவவேண்டும்.

அருணகிரி வருணனையின் அநுபூதி என்ற நூலை வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் வெளியிட்டுவைத்து ஆய்வுரை வழங்கிய ஆசிரியர்கலா சாலை முன்னுள் அதிபர் திரு. சி. விசுவலிங்கம் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார். வட்டுக்கோட்டை கலா நிலையமுதல்வரும் முன்னுள் அதிபருமான திரு. க. கயிலாயநாதன் எழுதிய இந்நூல் பற்றி தொடர்ந்தும் பேசிய திரு.விசுவலிங்கம் நூல் ஆக்கியோனின் ஆங்கிலம் தமிழ், மொழித்திறன் சிந்தனை ஆற்றல் மற்றும்நூலின் சிறந்த அம்சங்கள் பற்றி எடுத்து விளக்கினுர். பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி சிவனேஸ்வரி அம்மாவும் ஆய்வுரைநிகழ்த்தினுர்.

மில்க்வைற் தொழில்அதிபர் சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா உதவிய பொன்னுடையை திரு. விசுவலிங்கம் நூல் ஆசிரியர்திரு.க கபிலாயநாதனுக்குப் போர்த்திகௌரவித்தார். பதிலுரை நிகழ்த்திய திரு. கயிலாயநாதன் "பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்ற அருணகிரிநாத சுவாமிகளின் திருவாக்கு சைவாலயங்களில் திருமுறையாகவும் கலையாகவும் பரிணமிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

## நூலகவியல்
## முதல் வருடப் பரீட்சை
## 20, 21-6-1987

இடைநிலை வகுப்புக்கள்
ஜூன் மாதம் ஆரம்பம்

இரண்டிற்கும் விண்ணப்பங்கள்
முடிவு திகதி: 16-5-1987

## இலங்கை நூலகச் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

(சி 8881)

**மணிவாக்கு**

கோர்ட்டுக்குப் போகத் தலைப்பட்ட பிறகே மனிதர் மனிதத்தன்மையில் குறைந்தவர்களாயும், கோழைகளாயும் மாறினர். — மகாத்மா காந்தி.

## நமது நோக்கு

# நாட்டின் விடுதலைக்கு ஒரு விபீஷணன் வேண்டும்!

இந்திய சுதந்திரத்தை என்ன வகையிலும் நிறைவேற்றியே திரும்பவேண்டுமென்ற அரச கட்டளையுடன் வந்தவர் மன்னரின் நெருங்கிய இனத்தவர் மவுண்ட் பாட்டன் பிரபு.

நாட்டைப்பிரிக்கவேண்டி நேரிட்டாலும் அக்கைங்கரியத்தை முடித்து வைப்பேன்' என்ற திடசங்கற்பத்துடன் வந்த பிரபு அவ்வண்ணமே நடந்துகொண்டார்.

எங்கள் நாட்டின் சுதந்திரம் 'வைற்ஹோலில் உருவான பண்டமாற்றெனலாம். பிரிட்டிஷ் அரசுக்கும் காலஞ்சென்ற டீ. எஸ். சேனநாயக்காவிற்குமிடையே சேர். ஒலிவர் குணதிலக்கா மிகச் சாதுர்யமாக நடத்திய தரகின் வெற்றியே இலங்கைக்குத் தபாலில் வந்த சுதந்திரம்.

இலங்கை சுதந்திரதினக் கொண்டாட்டத்தில்கலந்து கொள்ள வந்தவர்கள் பிரிட்டிஷ் அரசின் பிரமுகர்கள் கிளஸ்டர் கோமகனும் சீமாட்டியாரும். அவர்களை வரவேற்று உபசரித்த நாட்டின் அன்றைய தலைவர்கள் அரச வம்சத்தினருக்கு நடத்திய பூசையின் ஆரவாரத்தில் தம்மை ஒரு காக்கா பிடிக்கும் கூட்டத்தினராகக் காட்டிக்கொண்டனர்.

அரச வம்சத்தினருடன் இச்சகம் பேசும் இழிவு இன்றுதான் ஒழிந்திருக்கிறதா?

கிளஸ்டர் தம்பதிகளும், சோல்பரி, லிஸ்டோவெல் பிரபுக்களும், கோழிக் கறியையும் சீனிச் சம்பலையும் நன்கு சுவைத்தார்களா என்பதில் கொண்ட ஆரவாரம் நாட்டின் பொதுமக்களுக்கு சுதந்திர மென்பதென்னவென்று விளக்கத் தடையாகவிருந்தது. எனவே தமிழரைப்பற்றிய சிந்தனையை எவ்வாறு எதிர்பார்க்கலாம்?

இதுவே இன்றுவரைக்கும் நாட்டைப் பீடித்திருக்கும் அச்சத்தின் காரணமாகும். இந்த அச்சம் இன்று உச்சத்தில் காணப்படுவதால் நாட்டிலேயே மேதினம் கொண்டாட முடியாதுபோய்விட்டது.

உளவியல் ரீதியில் பார்த்தாலும், பூரண சுதந்திரமடையாத நாட்டில், மக்களும் அதன் அரசும் அச்சமின்றி வாழ்வதரிது.

இன்று 'தமிழர் பயங்கரவாதமே' மேதினக் கொண்டாட்டத்திற்குத் தடையாகவிருக்கிறதென்று சொன்னபோதும், ஆழமான பார்வையில் அண்டிப் பிழைக்கும் நோக்குடைய தலைமை என்றும் தன்னுதிக்கம் செலுத்தும்வலிமையற்றது. பக்கபலத்துக்கு ஏதோ ஒரு பெருங்கையின் அணைவைத் தேடும்; அந்த நிலையில் ஆட்சியை கலக்கும் குழப்பங்கள் இடைவிடாது நிகழும்.

'யாழ் குடாநாடுமீது எந்நேரத்திலும் விமானத் தாக்குதல் நடத்துவோம்' என்று அமைச்சர் லலித்கூறுகிறார். ''இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வினைக்காண முடியாது தமிழ்ப்போராளிகளை ஒழித்துக்கட்டுவது என்ற அரசின் முடிவில் மாற்றமில்லை'' என்று பிரதமர் பிரேமதாசா கூறுகிறார். இவ்விரு வேறுபட்ட தீர்மானங்கள் நாம் குறிப்பிடும் அச்சத்தின் இருவேறு அம்சங்கள்.

இலங்கை ஒரு சுதந்திர நாடாக அதன் மக்கள் எவ்வித அச்சமுமின்றி விடுதலை அடைந்த மக்களாக வாழவேண்டுமென்றால் ஆட்சித் தலைவனுக்கு ஒரு விபீஷணன் இன்றியமையாத அமைச்சராக வேண்டும்

இன்றுதானும் அழிவிலிருந்து தப்பவேண்டுமானால், அத்தகைய அமைச்சர் ஜனாதிபதிக்கு காதுக்கினிமையான யோசனைகளைவிடக் கசப்பான உண்மைகளை எடுத்துரைக்கும் சாமர்த்தியமுள்ளவராயிருப்பார்.

''தருமம் என்று ஒன்று உண்டு; தமிழ்மக்கள் தங்களுக்கென்ன தீங்குசெய்தார்கள். யாழ்ப்பாணத்தைக் குண்டுவீசி ஷெல் அடித்து அழிக்க முற்பட்டால் நாடழிந்துவிடும்'' என்றுசொல்லும் நீதியும் துணிவுமுடைய ஆலோசகர் கிடைக்குமாயின் சமாதானம் அரும்ப வழிபிறக்கும்.

ஆட்சிக்கு பங்கம் வந்தாலும் நாட்டைக் காப்பாற்ற அயல்நாட்டைப் பகைக்காது, ஏகாதிபத்திய பிடிக்குப் பலியாகாது ஒரு புதிய பாதையே வேண்டும்.

தமிழினத்தை தம்வசப் படுத்தத் தவறும் எந்த அரசும், சுதந்திர இலங்கையின் ஆட்சியாக அமையாது.

# ''தமிழ்மக்கள் ஏற்கக்கூடிய அரசியல் தீர்வு காணவேண்டும்''

யாழ்ப்பாணம், சனி

அரசாங்கம் உடனடியாக இராணுவத்தீர்வினை கைவிட்டு தமிழ்மக்கள் ஏற்கக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றினைக் காணவேண்டுமென்று இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் [வட பிராந்தியம்]விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''அரசாங்கம் தேசிய இனப்பிரச்னையைத் தீர்த்துவைக்காமல், இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ்பேசும் மக்களைக் கொன்றுகுவித்து வருகின்றது. இதே நேரத்தில் அன்று திருகோணமலை ஜெயந்திபுர, கொழும்பு மத்தியபஸ் நிலையச் சம்பவங்கள் மக்களின் உயிரிழப்புக்கும் காலாக அமைந்துள்ளன. யார் இதனைச் செய்திருந்தாலும் இதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம். அரசு உடனடியாக இராணுவத்தீர்வினை கைவிட்டு தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய அரசியல் தீர்வொன்றினைக் காண வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.'' (மா)

தமிழ் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி—

# மலையக மக்கள் எதிர்பார்த்த விதத்தில் அமையாது!

மலையகத்தில் ஹட்டனை அடுத்துள்ள கொட்டகலை என்ற இடத்தில் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் நிதிஉதவியுடன் தமிழ் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஒன்று அமைக்கப்படும்என கடந்தசில மாதங்களாக செய்திகள் வெளிவந்தபோது மலையகமக்களின் கல்வியில் புதிய சகாப்தத்திற்கு அத்திவாரமாக இக்கல்லூரி அமையுமென தமிழ்மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருந்தார்கள்.

ஆனால் புதிதாக கட்டப்படும் கலாசாலை தமிழ் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியாக இல்லாமல் [College of Education] ஆசிரியர் கல்விக் கல்லூரியாக அமையுமென்றும் இங்கு தமிழ், சிங்கள ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படும் என்றும் தமிழ், சிங்கள மொழியினால் ஆன விரிவுரைகள் நடைபெறும் என்றும் தற்பொழுது அறியப்படுகிறது.

கடந்த மாதம் 11 திகதி ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன இக்கல்லூரிக்கான அடிக்கல்லை வைபவரீதியாக நாட்டிவைத்தார். விழாவில் கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க, கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு எஸ். தொண்டமான் ஆகியோருடன் வேறும்பல அமைச்சர்களும் கலந்துகொண்டனர்.

இக் கல்லூரிக்கு சிங்களப் பெயரான ''ஸ்ரீ பாத கல்விக் கல்லூரி'' [Sri pada College of Equcation]என பெயர் சூட்டப்பட்டுள்ளது கல்லூரி அமைந்திருக்கும் இடத்திற்கு ஸ்ரீ பாதபுர என்ற சிங்களப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ் பிரமுகர்கள் அமைச்சர் திரு தொண்டமானிடம், இந்தப் பெயரை வைப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்தபோது அமைச்சர் தானும் இப்பெயரை அறிந்து அதிர்ச்சி அடைந்ததாகவும் உடன் கல்வி அமைச்சருடன் தொடர்பு கொண்டு தனது ஆட்சேபனையையும், அதிர்ச்சியையும் கல்வி அமைச்சருக்கு தெரிவித்தபோது அதற்கு கல்வி அமைச்சர் ஹட்டனை அடுத்து சிவனொளிபாதமலை [ஸ்ரீ பாத] இருப்பதால் ஸ்ரீ பாத கல்விக் கல்லூரி என்ற பெயர் இருப்பதே மிகப் பொருத்தமானதாகும் என கூறியதாக அவர் விளக்கம் கொடுத்துள்ளார்.

ஜெர்மன் அரசு இக்கல்லூரிக்கு மட்டுமல்லாது இதோடு சேர்ந்து இன்னும் இருபது பாடசாலைகளுக்கு உதவிவழங்க இருக்கிறது. கல்வி அறிவில் பின்தங்கியுள்ள மலையக தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இப்பாடசாலைகள் கொடுக்கப்படவேண்டும் என்பது ஜெர்மனின் நோக்கமாகும். ஆனால் கல்விக் கல்லூரியில் சிங்கள மொழி மூலம் பயிற்சி கொடுக்கப்படவுள்ளதனால் சிங்கள ஆசிரிய மாணவர்கள் பயிற்சி பெற இப்பாடசாலைகளும் சிங்களப் பாடசாலைகளாக அமையுமென எதிர்பார்க்கலாம்.

தனித் தமிழ்க் கல்லூரியை எதிர்பார்த்திருந்தவர்கள் தனித் தமிழ்க் கல்லூரியாக அமையாமையினாலும், சிங்களப் பெயர் வைக்கப்பட்டுள்ளமையினாலும் பெயர் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

நுவரேலியா நிருபர்

86ல் யாழ். மாவட்டத்தில்

## 1674 பெண்கள் 14 ஆண்கள் கர்ப்பத்தடை!

சித்தன்கேணி, வெள்ளி

கடந்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் 1688 பேர் கர்ப்பத்தடை சத்திர சிகிச்சை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த ஆண்டுமட்டும் யாழ் மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும், தனியார் வைத்தியசாலைகளிலும் 1688 பேர் கர்ப்பத்தடை சத்திரசிகிச்சை செய்து அரசினரால் வழங்கப்படும் ஊக்குவிப்புப்பணம் ஐநூறு ரூபாவை யாழ். செயலக திட்டமிடல் பகுதியினரிடமிருந்து பெற்றனர். கர்ப்பத்தடைசெய்த 1688 பேரில் 1674 பேர் பெண்களும், 14 பேர் ஆண்களும் அடங்குவர்.

## கொழும்பு குண்டுவெடிப்பில் வட்டுவாசியும் பலி!

சித்தன்கேணி, வெள்ளி

புறக்கோட்டை பஸ் நிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் வட்டுக்கோட்டை சிவன்கோவிலடியைச் சேர்ந்த ஆசைப்பிள்ளை சிவப்பிரகாசம் என்பவரும் பலியானார். இது குறித்து இவரது அடையாள அட்டை மூலம் அறிந்து கொண்ட பொலிசார் இவருடைய மனைவியாருக்கு அறிவித்துள்ளனர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் முன்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தொழில் நுட்ப ஊழியராகக் கடமையாற்றி இளைப்பாறி வெளிநாட்டில் வேலை செய்துவிட்டு அண்மையில் நாடு திரும்பினார்.

## ஆலயங்களில் பிரார்த்தனை

சுழிபுரம் வெள்ளி

தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைப் போக்க இறையருள் வேண்டி பிரதி ஞாயிறு தோறும் பண்ணாகம் சத் சங்க வட்டத்தினர் ஆலயங்களில் பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

## நெல்லியடி பிரஜைகள் குழு உதவி

நெல்லியடி, வெள்ளி

செட்டிகுளம் பகுதியில் இருந்து பல குடும்பங்கள் அகதிகளாகக் கரவெட்டிப் பகுதியில் தஞ்சமடைந்துள்ளன.

அண்மையில் குடத்தனை பகுதியிலுள்ள கடற்றொழிலாளர்கள் சிலரை இராணுவம் கைது செய்ததன் விளைவாகவும் அங்கிருந்து சில குடும்பங்கள் கரவெட்டியில் தஞ்சமடைந்துள்ளன.

நெல்லியடிப் பிரஜைகள் குழு இவர்களுக்கு உடனடி நிவாரணங்களை வழங்கியுள்ளது.

## சங்கானைப்பகுதி சுகாதார சீர்கேடு பற்றி ஆராயப்பட்டது

பண்டத்தரிப்பு, வெள்ளி

சங்கானை பட்டினப்பகுதியில் நிலவும் சுகாதார சீர்கேடுகள்பற்றி ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு யாழ். அரசாங்க செயலகத்தில் விசேடமகாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

யாழ். அரசாங்க அதிபரின் உதவிச் செயலாளர் திரு. எஸ். பரமநாதன், யாழ். பிரதேச உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் ஆகியோர் கலந்து கொண்ட இம்மகாநாட்டில் சங்கானை பட்டின உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் வி சிறிகாந்தா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சங்கானை தனியார் பிணிதீர் மகப்பேறு மருத்துவமனையிலுள்ள நோயாளர்களும் ஊழியர்களும் அதற்கண்மையிலுள்ள பேக்கறி, மா, மிளகாய்த்தூள் திரிக்கும் ஆலை ஆகியவற்றினால் அடைந்து வரும் பாதிப்புகள் பற்றியும், சுற்றுடல் சுகாதாரம் பாதிக்கப்படுவது பற்றியும் டாக்டர் செ. நாகநாதர், சத்திர சிகிச்சைநிபுணர் டாக்டர் சேவியர் ஆகியோர் இம்மகாநாட்டில் சுட்டிக்காட்டி விபரமாக எடுத்துக்கூறினார்கள்.

சங்கானை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், செயலாளர் மற்றும் நிற்சாமம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆகியோரும் இம்மகாநாட்டில் இப்பகுதியின் சுகாதார சீர்கேடுகள் பற்றி எடுத்துக் கூறினார்கள்.

## ஆலயம் புனரமைக்க ஏற்பாடு

(வவனியா நிருபர்)

யாழ். கண்டிவீதி தாண்டிக் குளத்தில் அமைந்துள்ள முருகன் ஆலயம் புனரமைக்கப்படவுள்ளது

வவுனியா தெற்கு தமிழ் பிரிவு உதவி அரச அதிபர் திரு கே. ஐயம்பிள்ளையினை போஷகராகக் கொண்ட ஆலய பரிபாலன சபை ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது

இவ்வாலய புனருத்தாரணத்திற்கு அடியார்களிடமிருந்து உதவிகள் எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

## செஞ்சிலுவை அடையாளம்

புங்குடுதீவு, வெள்ளி

விமானத் தாக்குதல்களிலிருந்து நோயாளர்களை பாதுகாத்துக் கொள்ளும் நடவடிக்கையாக புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையின் கூரைமீது செஞ்சிலுவை அடையாளங்கள் போடப்பட்டுள்ளன.




இன்றைய
№ 1
நீலசோப்
தேசிக்காய் வாசனையுடன்
எம்டீ நீலசோப்
எம்டீ என்ரபிறைஸஸ், அச்சுவேலி

ஏ 3852


# சோவியத்நாட்டில்தனியார்

## சிறு தொழில்முயற்சிக்கு அனுமதி!

மாஸ்கோ. மே 1

**சோவியத் யூனியனில் மட்டுப்படுத்தப்பட்ட முறையில் தனியார் சிறு கைத் தொழில் முயற்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சுமார் 30 சிறு தொழில் முயற்சிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சுயதொழில் முயற்சிகளைச் சிறிய அளவில் ஊக்குவிக்கும் வகையிலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சோவியத் அரசு கூறியுள்ளது. முதலாளித்துவத்தைத் துளிர்விடச்செய்வது எந்தவகையிலும் இதன் நோக்கமல்ல எனவும் தெரிவிக்கப்பட்டது.

சிகை அலங்காரம், மீன் வளர்ப்பு உட்பட சுமார் 30 சிறு கைத்தொழில் முயற்சிகளுக்கு சோவியத் அரசு அனுமதியளித்துள்ளது.

ஓய்வுநேரத்திலும் மற்றும் சிறிய அளவிலும் சோவியத் நாட்டவர்கள் இதில் ஈடுபட அனுமதிக்கப்படுவர்.

இத்தகைய சிறு தொழில்களை ஆரம்பிப்பதற்கான அனுமதியைப் பெற 2000 விண்ணப்பங்கள் மாஸ்கோவில் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே சில சோஷலிஸ நாடுகளில் இத்தகைய மட்டுப்படுத்தப்பட்ட தொழில் முயற்சிகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

சோவியத்திலும் இத்தகைய அனுமதிமூலம் கறுப்புப்பணம், சந்தை நடவடிக்கைகளை முறியடிக்க முடியுமென்று கிரெம்ளின் ஆட்சிபீடம் தெரிவித்துள்ளது.

---

### 'கொஸாற்ரோ' தொழிற்சங்கத்தில்

# 12 வயது சிறுவன் உட்பட 11 பேர் தென்னுபிரிக்கப் பொலிசாரால் கைது!

ஜொஹன்ஸ்பேர்க், மே 1

தென்னுபிரிக்காவின் ஜொஹன்ஸ்பேர்க் நகரில் கறுப்பினத்தவரின் பிரதான தொழிற்சங்கக் கட்டிடத்தில் கைதான 11 பேரில் 12 வயது முதல் 49 வயதிற்குட்பட்டவர்கள் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தென்னுபிரிக்கப் பொலிசார் இந்தத் தொழிற்சங்கக் கட்டிடத்திற்குள் நுழைந்து அங்கிருந்தவர்களைக் கைதுசெய்த விதம் அநாகரிகமானதும், சட்ட விரோதமானதும் என்று கொஸாற்ரோ தொழிற்சங்கச் செயலாளர் கருத்து வெளியிட்டுள்ளார்.

தென்னுபிரிக்கப் பொலிசார் இக்கைது குறித்துக் கருத்து வெளியிடுகையில், அண்மையில் 4 கறுப்பின தென்னுபிரிக்க ரயில்வே தொழிலாளர்கள் கொலைசெய்யப்பட்டது குறித்தே தாம் இந்தத் தொழிற்சங்கம்மீது நடவடிக்கைஎடுத்ததாகத் தெரிவித்தனர்.

---

## இன்றைய பலன்

மாதம்- சித்திரை
திகதி- 19 (1 87-05-02)
கிழமை- சனி
திதி- சதுர்த்தி மு ப. 11-35ன் மேல் பஞ்சமி
நக்ஷத்திரம்- மிருகசீரிடம் பி. ப. வரை

மேடம்- உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள் தொழிற்துறையில் முன்னேற்றமுண்டு வெளியிடத்துச் செய்தியும் கிடைக்கும்.

இடபம்- மெத்தவும் பொருள் சேரும். மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிடைக்கும் தேனுன செய்தியுடன் வாழ்வுமுண்டு.

மிதுனம்- அன்னியர் மத்தியில் அதிகம் பழகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். வயிற்றுக்கோளாறுக்கு இடமுண்டு. உணவு விடயத்தில் சுகாதாரம் நன்று.

கடகம்- மனம் நிறைந்த சம்பவம் இடம்பெறும். பெரியவர்களின் ஆசி தாராளமாகக் கிடைக்கும் வரவுக்கும் இடமுண்டு.

சிங்கம்- குடும்பத்தில் சிறு பூசல் தலைதூக்கும். பெரியவர் ஒருவருடன் அபிப்பிராய பேதம் தோன்றக்கூடும். ஆத்திர உணர்ச்சியைத் தவிர்க்கவும்.

கன்னி- கனிவான நினைவுகளில் மிதந்து செல்வீர்கள் சகோதரபாசம் தலைதூக்கும். முன்னேற்றமும் உண்டாம்.

துலாம்- செய்தொழில் சிறப்புப்பெறும். வழக்கு விவகாரம் வெற்றியைத்தரும். நீண்டநாள் பிணி நிவர்த்தியாகும்.

விருச்சிகம் - தூரத்துப் பயணம் துயரத்தைத்தரும் வருமானத்தில் வீழ்ச்சிதென்படும். வைத்தியச் செலவிற்கும் இடமுண்டு.

தனுசு- குடும்பம் இன்று கலைக் கோயிலாகமாறும் இசைத்துறையில் ஆர்வம் பிறக்கும் பிள்ளைகளினுல் பெருமைக்கும் இடமுண்டு.

மகரம்- இறைவழிபாடு மேலிடும். இதயத்தில் அமைதியும் ஏற்படும் குடும்பத்தில் மகிழ்ச்சியுமுண்டு.

கும்பம்- தானிய விருத்தியுடன் தனவரவுமுண்டு. தொழில் துறையில் தொல்லைகள் நீங்கும் பொதுப்பணிகளிலும் ஈடுபடுவீர்கள்.

மீனம்- முதியவர் ஒருவர் தக்கசமயத்தில் உதவமுன்வருவார். புதுத்தொழில் விருப்பும் புண்ணிய விடயங்களில் ஈடுபாடும் உண்டாம்.

**திருமலை ரவீந்திரன்**

---

### நெவாடா பாலைவனத்தில்

# அமெரிக்காவின் 800-வது அணுசக்திப் பரிசோதனை!

வாஷிங்டன், மே-1

அமெரிக்கா தனது 800-வது அணுசக்திப் பரிசோதனையை நேற்று நெவாடா பாலைவனத்தில் நடத்தியது.

20 முதல் 150 தொன் எடையுள்ள அணுசக்தியை நெவாடா பாலைவனத்தில் நிலத்தின் கீழ் 2 ஆயிரம் அடி ஆழத்தில் அமெரிக்கா பரீட்சித்தது.

லாஸ்வெகாஸ் நகரிலிருந்து 160 கிலோ மீட்டர் தொலைவில் வடமேற்குப் பகுதியில் இப்பரிசோதனை நடத்தப்பட்டது.

இந்த ஆண்டு அமெரிக்காவினுல் நடத்தப்பட்ட ஆருவது அணுசக்திப் பரிசோதனை இதுவாகும். அத்துடன் 1945ம் ஆண்டிலிருந்து இன்றுவரை நடத்தப்பட்ட அமெரிக்காவின் 800வது அணுசக்திப் பரிசோதனையாகவும் இது விளங்கியது.

---

# அகதிகளான எமது மக்களை ஆதரிப்பது எமது கடமை

சித்தன்கேணி, வெள்ளி

"தமிழ் மக்கள் இன்று மிகவும் இக்கட்டான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றுர்கள். எந்நேரமும் தாங்கள் சாகடிக்கப்படலாமென்ற எண்ணத்துடனேயே நாள்தோறும் தமது வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருக்கிறுர்கள். தமது சொந்த மண்ணிலேயே நாளுக்குநாள் அகதிகளாக்கப்படுகின்றனர். இந்த நிலையில் எமது மக்களை எவ்வாறு நாம் ஆதரிக்கலாமென்பதே இன்று எமது சிந்தனையாகவிருக்கின்றது. காங்கேசன்துறையிலிருந்து இன்று அகதிகளாக்கப்பட்டுள்ள மக்கள் இங்கு வந்துள்ளனர். இவர்களை நல்ல முறையில் கவனிப்பதற்கு ஒரு அமைப்பு அவசியமானதாகும்."

இவ்வாறு தமிழ் மகளிர் அவையைச் சேர்ந்தவரும், அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தருமாகிய திரு. இரா. முருகையா, சங்கானையில் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பொன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் க உபேந்திரன் தலைமையில் சங்கானை பட்டின சபைப் பொது நூலகத்தில் நடைபெற்ற இந்த அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் திரு. இரா. முருகையா தொடர்ந்து பேசுகையில், அகதிகளின் நலன்களை கவனிப்பதற்கு மட்டுமல்லாமல் இவ் அமைப்பு மற்றும் கல்வி, வேலைவாய்ப்பு, சந்தைப்படுத்துதல் போன்றவற்றிலும் தமது கவனத்தை செலுத்த வேண்டும்

விவசாயிகளுக்கு தகுந்த ஆலோசனைகளையும் இந்த அமைப்புகள்தான் வழங்க வேண்டும். உள்ளூர் உற்பத்திப் பொருட்களை எல்லோரும் வாங்குவதற்கு முன்வரவேண்டும்.

---

### காங்கேசன்

## துறைமுகஊழியர்

### ஞாயிறுகூடுகின்றனர்

யாழ்ப்பாணம், சனி

காங்கேசன்துறை துறைமுகப்பகுதிஊழியர்களின் எதிர்காலம் குறித்து ஆராயும் பொருட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை இணுவில்ஆஸ்பத்திரிக்கு முன்னுல உள்ளமண்டபத்தில் விசேடகூட்டமொன்று நடைபெறுகிறது.

துறைமுகப்பகுதி லங்கா சிமந்து நிறுவனநலன்புரிநிதியம் இக்கூட்டத்தைக் கூட்டுகிறது.

---


# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

VADDUKODDAI.

## கல்வி ஆண்டு 87 / 88

### ஆரம்பம் 1-7-87

பின்வரும் பயிற்சி வகுப்புக்களுக்கு
மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

### முடிவு திகதி 31-5-87

(I) தொழிற் பயிற்சி நெறிகள்
(CRAFT COURSES)

(a) உலோகவார்ப்பு (Foundry Practice)
(b) உலோக ஒட்டுநர் (Welding Practice)
(c) இயந்திர உபகரண உற்பத்தி (Machine Shop Practice)
(d) மின் இணைப்புப் பயிற்சி (Electrical Installation Practice)

**பயிற்சி நெறிகள் 1 வருடம், 2 தவணை முறையில் தமிழ்மொழி மூலம் முழு நேர வகுப்புக்களாக நடாத்தப்படும்.**
**தவணைக்கு ரூபா 600/-**
G. C. E. (O/L) படித்த தொழிற்கல்வியில் ஆர்வமுள்ள 21 வயதுக்குட்பட்ட மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

(II) தொழிற்கல்விப் பயிற்சி
(Technician Certificate Course)

(a) மோட்டார் வாகன பொறிமுறை (Automobile Technology)
(b) காற்று பதனிடல் குளிரூட்டல் கல்வி (Air-Conditioning & Refrigeration)

**பயிற்சி வகுப்புக்கள் 1 1/2 வருடம், 3 தவணை முறைகளில் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும்.**
**தவணைக்கு ரூபா 1000/-**
G. C. E (O/L) தராதரத்தில் கணிதம் உட்பட குறைந்தது 6 பாடங்களில் சித்தி உள்ள 21 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

(III) தொழில்நுட்ப டிப்ளோமா
(TECHNICIAN DIPLOMA)

(a) இலத்திரன் தொலைத்தொடர்பு நுண்ணியல் (Electronic & Communication)
(b) மின்னியல் பொறிமுறை (Electrical Power Engineering)
(c) இயந்திர பொறியியல் (Mechanical Engineering)
(d) கட்டிடக்கலை அளவியல் (Building Construction & Quantity Surveying)

**பயிற்சிநெறிகள் 3 வருடம் —6 தவணை முறையில் தேர்ச்சி பெற்ற பொறியியலாளர்களால் City & Guilds of London Institute — பரீட்சைகளின் தராதரத்தில், ஆங்கிலமொழியில் நடாத்தப்படும்.**
G. C. E. (O/L) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் பாடங்களில் விசேட சித்தியுடன் குறைந்தது 6 பாடங்களில் சித்தியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

### தவணைப்பணம்

| | | | |
|---|---|---|---|
| 1-ம் தவணை | — | ரூ. 1500/- | |
| 2-ம்—5-ம் தவணை | — | ரூ. 1000/- | வீதம் |
| 6-ம் தவணை | — | ரூ. 750/- | |
| வைப்புப்பணம் | — | ரூ. 500/- | |

★ வறிய திறமையுள்ள மாணவர்கள் 50% தவணைப் பண சலுகைகள் பெற வாய்ப்பு உண்டு
★ 21 வயதுக்குட்பட்ட இருபாலாரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.
★ விடுதிவசதிகள் உண்டு.
★ விண்ணப்பப்பத்திரம் ரூபா 5/- காரியாலயத்தில் பெற்று 31 5-87க்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

**பணிப்பாளர்.**

(ஏ 3958)



அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புக்கள் கலந்துகொண்ட ஐக்கிய மேதின ஊர்வலம்.

# புலிகளின் மேதின

[1ம் பக்கத் தொடர்ச்சி] படப் பல்லாயிரக்கணக்கான தொழிலாள மக்களும் அரச, தனியார் நிறுவன ஊழியர்களும், பாடசாலை மாணவர்களும் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டனர்.

இவ்வூர்வலத்தில் சுட்டெரிக்கும் உச்சிவெய்யிலில் கைக்குழந்தைகளை ஏந்திய வண்ணம் பல தாய்மார்களும் அணிதிரண்டிருந்தனர்.

## புலிக்கொடி

புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான செந்நிற கொடிகளை கையிலேந்திய வண்ணம் அணிவகுத்து வந்த ஊர்வலம் பெரும்படையொன்று வருவது போல் காட்சியளித்தது.

உருப்பராயில் ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலத்தின் முதலாவது அணி திருநெல்வேலி வந்தடைந்த போது ஊர்வலத்தின் இறுதி அணி உரும்பராயில் நின்றது.

இதனிடையே உரும்பராயில் இருந்து திருநெல்வேலி வரைக்கும் வீதியெங்கும் சன நெருக்கமாகவே காணப்பட்டது இதனால் இவ்வீதி போக்வரத்து தடைப்பட்டிருந்தது.

## நான்கு மைல் தூரம்

சுமார் நாலு மைல் தூரத்தை உள்ளடக்கியதாக விருந்த இவ்வூர்வலம் நகர்ந்து செல்ல மூன்றரை மணித்தியாலயங்கள் எடுத்தது.

## ஐம்பது ஒலிபெருக்கிகள்

ஐம்பதிற்கு மேற்பட்ட ஒலிபெருக்கிகள் பூட்டிய வாகனங்கள் ஊர்வலத்தின் பின்னாலும் முன்னாலும் நின்று ஊர்வல ஒழுங்குகள் பற்றி அறிவித்துக்கொண்டிருக்க ஐம்பதிற்குமதிகமான இளைஞர்கள் வாக்கிடோக்கிகளை கையிலேந்திய வண்ணம் ஒவ்வொரு குழுவுடனும் தொடர்பு கொண்டு தலைமை தாங்கியவண்ணம் சென்று கொண்டிருந்தனர்.

## சுலோகங்கள்

பலசுலோகங்களை கோஷித்தவாறும், சுலோக அட்டைகளைத் தாங்கியவாறும் ஊர்வலத்தினர் சென்றனர்.

## நூறுபேர் மயக்கம்

சன நெரிசல் காரணமாக இவ்வூர்வலத்தில் வந்தவர்களில் நூற்றுக்கணக்கானோர் மயக்கமடைந்து வீழ்ந்தனர். இவ்வாறு மயக்கமடைந்தவர்கள் அம்புலன்ஸ் வண்டிமூலம் எடுத்துச் செல்லப்பட்டுச் சிகிச்சையளிக்கப்பட்டனர். இதற்காக முதலுதவிப் படையொன்றும் ஊர்வலத்தில் வந்தது.

காலை ஒன்பது மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்வூர்வலம் நண்பகல் ஒரு மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலடியை வந்தடைந்தது.

## தளபதி கிட்டு வந்தார்

அங்கு பொதுக்கூட்டப் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் பங்குபற்றுவதற்கென தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதி கிட்டு 'பிறவுண்' நிற வான் ஒன்றில் வந்தபொழுது அவருக்கு ஆதரவு தெரிவித்து மக்கள கரகோஷம் எழுப்பினர்கள்.

## ஹெலி வந்தது

பொதுக்கூட்டம் முடிவுற்ற சில நிமிடங்களில் இப்பகுதி நோக்கி வந்த ஹெலிகாப்டர் ஒன்று நல்லூர்க் கோயில் சுற்றுடலைப் பலதடவைகள் சுற்றி வட்டமிட்டுச் சென்றது. (ஒ)


**லிடோ** யாழ் நகர்.

10-30. 2-30, 6-30

சிவகுமார் -சுஹாஷினி நடித்த

**சிந்து பைரவி**

1986ம் ஆண்டு இந்திய ஜனதிபதியின் சிறந்தவிருதைப்பெற்ற படம் சங்கீத இசைப்பிரியர்களுக்கோர் சிறந்த வரப்பிரசாதம்.

[புதிய வெளியீடு கலர்]

புதிய வெளியீடு

**வெலிங்டன்** திரையில்

10-30, 2-30, 4-30, 6-30

பயங்கர சண்டைகள், திகிலூட்டும் கொலைகள், மர்மங்கள், காதல் நிறைந்த

SCORP.ON THUNDER BOLT

[Strictly for Adults] Sex, Action, Thrill, Suspense


## கூட்டணிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை பூர்த்தி செய்ய முடியாத பேச்சுவார்த்தைகளை ஜே ஆர். நடத்தியபோது அதனை ஒட்டிய எந்தவிதமான நடவடிக்கையையும் அவரால் எடுக்க முடியவில்லை.

சுமார் 40 வருடங்களுக்கு மேலாக அரசியல் நடத்திய தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தனிநாடு அமைப்பதற்கான எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

## எம். ஜி. ஆருக்கு பாராட்டு

தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் வழங்கிய நிவாரண உதவி பாராட்டத்தக்கதாகும். ஈழப் போராட்டத்தில் இறங்கியுள்ள விடுதலை அமைப்புக்களைத் தமிழகமும், இந்தியாவும அங்கீகரிக்கவேண்டும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் சாதுர்யமான இராணுவ நடவடிக்கைகளினால் இனவாத அரசின் ராணுவம், இன்று முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்கிறது என்பதையும்இங்கு குறிப் பிட விரும்புகிறேன்.

திருவாளர்கள் பாலா, வாசு, எட்வேர்ட், செல்வநாயகம் ஆகியோரும் உரையாற்றினர்கள். (வா)

# "மக்களின் எழுச்சியின் மூலமே விடுதலையைப் பெற முடியும்"

(க. கணேசராசா)

"ஆயுதப் போராட்டத்தால் மட்டும் விடுதலையை வென்றெடுக்கமுடியாது. மக்களின் ஒன்றுபட்ட எழுச்சியின் மூலமே விடுதலையைப் பெற்றுவிட முடியும்:"

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசப் பொறுப்பாளர் திரு. அ. வைத்திலிங்கம் நேற்று அனைத்து இடதுசாரி அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், வெகுஜன அமைப்புகள் ஆகியன ஒன்றிணைந்து நடாத்திய ஐக்கிய மேதினக் கூட்டத்தில் கூறினர்.

மேற்படி கூட்டம் கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலய முன்றலில் அரசாங்க பொது சேவைத் தொழிற் சங்க சம்மேளனப் பிரதிநிதிதிரு. க நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

ஐக்கிய மேதின ஊர்வலம் நேற்று முற்பகல் நல்லூர் இந்து விடுதியில் ஆரம்பமாகி கந்தர்மடம், நாவலர் வீதியூடாக காங்கேசன்துறை வீதியால் கொக்குவில் மஞ்சவனப்பதியை வந்தடைந்தது.

மேற்படி கூட்டத்தில் திருவாளர்கள் கே. ஏ. சுப்பிரமணியம், விஜயானந்தன், கே. செந்திவேல், ஆ. க. அண்ணமலை உட்படப் பலர் உரையாற்றினர்கள்.

## ஜே. ஆரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளதாவது:-

"இந்தியா இனப்பிரச்னை விடயத்கில் இலங்கை அரசும் போராளிகளும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டுமென்றே விரும்புகிறது.

"டிசம்பர் 19-ம் திகதி யோசனைகளுக்கமைய இருபகுமுயினரும் தீர்வைக் காணயலவேண்டும்.

"வன்முறைகள் எந்தத்தரப்பில் இடம்பெற்றாலும் இந்தியா அகனைக் கண்டிக்கிறது.

"இலங்கை அரசு தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளும் ராணுவ நடவடிக்கைகளினால் தமிழக மக்கள் மிடிந்த ஆத்திரமடைந்துள்ளார்கள்.

மேலும் இலங்கையில் குறிப்பாக மொசாட் போன்ற அந்நிய நாட்டு கூலிப்படைகள் தமிழருக்கு எதிரான ராணுவ நடவடிச்கைகளில் ஈடுபடுவது குறித்து இந்தியா பெரும் கவலை கொண்டுள்ளது.

"இதேவேளை யாழ்ப்பாணத்தில் அப்பாவி மக்கள்மீது படையினர் மேற்கொள்ளும் தாக்குதல்களால் அவர்கள் செய்வதற்கு வேறுவழியின்றி பெரும் துன்பமடைகின்றார்கள்." (எ)

## அரசு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசு கனவுகாண்கிறது.

விடுதலைப்புலிகள் இயக்க மத்தியகுழு உறுப்பினர் திரு யோகி பேசுகையில் கூறியதாவது;

',தமிழீழவிடுதலைப்போராட்டத்திற்கு தலைமை தாங்கும் தகுதியுடையவர்கள் பாட்டாளி மக்களான உழைக்குர் வர்க்கம் என்பதனை இன்றைய ஊர்வலம் எடுத்துக் காட்டுகிறது

"விடுதலைப் புலிகள் இயக்கம் சிறிய அமைப்பல்ல,பாட்டாளி மக்களையும், உழைக்கும் மக்களையும் உள்ளடக்கிய ஒரு மக்கள் அமைப்பு.

"தமிழீழம்தான் எமது முடிந்த முடிவு. வேறு எதனையும் நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை."

மாணவர் முன்னணிப் பொறுப்பாளர் முரளி, பெண்கள் அணியைச் சேர்ந்த சத்தியபாமா, தொழிலாளர் அமைப்பைச் சேர்ந்த மூர்த்தி ஆகியோரும் இக்கூட்டத்தில் பேசினார்கள். (ஒ)

## கருணாநிதி வேண்டுகோள்

(சென்னை)

இலங்கை அரசுடனான சகல ராஜிய தொடர்புகளையும் இந்திய அரசு உடனடியாக நிறுத்திக்கொள்ளவேண்டுமென்று தி. மு. க. தலைவரும் தமிழக எதிர்க்கட்சி தலைவருமான திரு. மு. கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஜே. ஆருக்கு மார்க்கோஸின் கதி ஏற்படும்

(கொழும்பு)

"சர்வஜன வாக்கெடுப்பிற்கு ஜெயவர்த்தன முனைந்தால் பிலிப்பைன்ஸில் மார்க்கோஸுக்கு ஏற்பட்ட கதியே ஜெயவர்த்தனவிற்கும் ஏற்படும்" என்று சுதந்திரக்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

சுதந்திரக் கட்சித் தலைமை பணியகத்தில் நடைபெற்ற மேதினக்கூட்டத்தில் அவர் உரையாற்றுகையிலேயே இவ் எச்சரிக்கையை விடுத்தார். (சி)



ஈழவர் முன்னணியின் மேதின ஊர்வலத்தில் சீருடையணிந்த மகளிர் அணிவகுத்துச்செல்வதை மேலேஉள்ள படத்திலும், அரசின் போக்கைச் சித்தரிக்கும் ஊர்திகளை கீழேஉள்ள படத்திலும் காணலாம்.



# இலங்கைத் தமிழருக்கு தமிழ்நாட்டு மக்கள் அனைவருமே ஆதரவு

— மு. கருணாநிதி.

[சென்னை]

இலங்கைத் தமிழர் பிரச்னையில் தமிழ்நாட்டு மக்கள் அனைவருமே அவர்களுக்கு ஆதரவாகத்தான் இருந்து வருகிறார்கள், என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு கருணாநிதி கூறினர்.

இலங்கைத் தமிழர் இயக்கங்கள் பயங்கரவாதத்தில் ஈடுபடுவதற்கு திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை தான் காரணமாகவுள்ளன வென்று இலங்கை ஜனதிபதி கூறியிருப்பது குறித்து திரு. கருணாநிதி கருத்துத் தெரிவிக்கையிலேயே மேறகண்டவாறு கூறினர்'

இலங்கைத் தமிழர் விடயத்தில் தமிழ் நாட்டிலுள்ள கட்சிகளின் அடிப்படையில்பிரித்துப் பார்க்கத்தேவையில்லை. மக்கள் அனைவருமே இலங்கைத் தமிழருக்கு ஆதரவாகத்தான் இருக்கிறார்கள் என்றார் திரு. கருணாநிதி.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

சனிக்கிழமை 2 5-87

# கோப்பாயில் பஸ்மீது ஹெலி சூடு

## ஐந்து பிரயாணிகள் காயம்

யாழ்ப்பாணம், சனி

கோப்பாயிலும், வண்ணுத்தி பாலம் அருகிலும் நேற்று ஹெலிகொப்டரிலிருந்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினுலும் குண்டு வீச்சினுலும் பொதுமக்கள் 5 பேர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை சாவகச்சேரியிலிருந்து கோப்பாய் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ் மீது கோப்பாய் வாழைத் தோட்டத்திற்கு மேலாக ரோந்து சேவையிலீடுபட்டிருந்த ஹெலிகொப்டரிலிருந்து படையினர் துப்பாக்கிப் பிரயோகமும் குண்டுவீச்சுத்தாக்குதலும் மேற்கொண்டதில் மூவர் காயமடைந்தனர்.

இச் சம்பவத்தில் காயமடைந்தவர்களான திருமதி அல்பிரட் ஜெயமணி (வயது 32) பருத்தித்துறை, எஸ். சிவா (22 வயது) மட்டுவில் ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

### பிற்பகல் சம்பவம்

நேற்றுப் பிற்பகல் 2-30 மணியளவில் வண்ணுத்தி பாலம் அருகில் எல்வ்ரக வான் ஒன்றுசென்றுகொண்டிருந்தபோது நாவற்குழி முகாமிலிருந்து வந்த ஹெலிகொப்டர் தாழப்பறந்து வானைச் சுற்றி பல தடவைகள் வட்டமிட்டுச் சுட்டதில் வானில் பயணம்செய்தவர்களில் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் ஒருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் மற்றவர் யாழ். ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவத்தில் வலது கையில் காயமடைந்த அ: சுந்தரம் (26 வயது) தாழையடி என்பவரே யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர். [ஓ]

### இலங்கையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனெனில் கிழக்கு சோவியத் பகுதி மேற்படி ஒலிபரப்பின் வட்டத்துக்குள் வருமென்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ)



ஈழவர் முன்னணியினரால் நடாத்தப்பட்ட மேதின ஊர்வலம் இணுவில் கந்தசுவாமிகோவில் முன்றலில் இருந்து புறப்படுவதை படத்தில்காணலாம்

# ஈழவர் முன்னணியின் மாபெரும்மேதினஊர்வலம்

(அலுவலக நிருபர்)

உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தின் மேதின ஊர்வலம் ஈழவர் முன்னணியினரால் நேற்றுநடாத்தப்பட்டது.

இணுவில் கந்த சுவாமி கோவில் முன்றலிலிருந்துகாலை 10 மணிக்குஆரம்பமான இந்த ஊர்வலத்தில் உழைக்கும் பாட்டாளிவர்க்கத்தினர் சிறுவர் முதல், முதியோர்வரை கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் பெண்கள் அதிகமாகக்காணப்பட்டனர்.

ஊர்வலம் சென்ற காங்கேசன்துறை வீதி சுன்னுகம் மத்திய சந்தைவரை செங்கொடிகளினுல் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ஊர்வலத்தின் முன்னே கறுப்புவெள்ளை சீருடை அணிந்த இளம்பெண்கள் வரிசையாக அணிவகுத்துச்செல்ல ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் "ஈழவர் முன்னணி" பதாகைகளும், சுலோகங்ளும் தாங்கியவண்ணம் கோஷங்களை எழுப்பிச் சென்றனர்.

ஊர்வலத்தின் இடையே பல்வேறுபட்ட ஊர்திகள், மாட்டுவண்டில்கள், உழவு யந்திரங்கள் ஆகியவற்றில் ஈழப்போராட்ட வரலாற்றைச்சித்தரிக்கும் படங்கள் உழைக்கும் பாட்டாளிவர்க்கத்தின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிச்கும் ஊர்திகள் காணப்பட்டன.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட பல பெண்கள் தப் கைக்குழந்தைகளையும் சுமந்தவாறு சென்றனர்.

மூன்றுமைல் நீளமானஇந்த ஊர்வலம் கூட்டமைதானத்தைச்சென்றடைய இரண்டு மணித்தியாலங்கள் எடுத்தது

### உறுதிப் பாட்டை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சியை, எமது உரமிக்க உறுதிப் பாட்டை உலகிற்கு வெளிக் காட்டியுள்ளோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் திரு. வே. பிரபாகரன் மேதினம் தொடர்பாக நேற்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்தார்.

அவ்அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மக்களின் அசையாத உறுதிப்பாடு தமிழீழத்தை வென்றெடுக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. இம்மாபெரும் தொழிலாளர் எழுச்சியில் பங்கேற்ற மக்கள் ஒவ்வொருவருக்கும் நான் எனது உளமார்ந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப்புலிகளின் இலட்சியப் பாதையில் இலட்சக்கணக்காக அணிதிரண்டு சுதந்திர தமிழீழத்தை வென்றெடுக்கும் போராட்டத்தில் ஒன்று கலக்குமாறு வேண்டுகிறேன்.



விடுதலைப்புலிகளின் மேதின ஊர்வலம்

## மரண அறிவித்தல்

### ப. மோகனதாஸ்

கைதடி விக்னேஸ்வர வித்தியாலய ஆசிரியர் திரு. க. பத்மநாதன் திருமதி கனகாம்பிகை ஆகியோரின் இரண்டாவதுபுதல்வன் செல்வன் மோகனதாஸ்(லதன்) நேற்றுக் காலமானுர். ஈமக்கிரியைகள் இன்று 02-5-87 சனிக்கிழமை மட்டுவில் தெற்கில் நடைபெறும்.

தகவல்: க. பத்மநாதன். (சி 8889)

### திருமதி செல்லம்மா இராசரத்தினம்

கொக்குவில் கிழக்கு நந்தாவிலைச் சேர்ந்த திருமதி செல்லம்மா இராசரத்தினம் காலமாகிவிட்டார். அன்னுர் காலஞ்சென்ற அருணுசலம் இராசரத்தினம் ((Malayan Pensi ner), அவர்களின் மனைவியும், சிவரத்தினம் (முன்னுள் O A. Samuel & Sons, Colombo), காலஞ்சென்ற நவரத்தினம் (Assistant Superitendent of Surveys), கனகரத்தினம் (முன்னுள் (C. W. E. Audit), சிறீபதி (முன்னுள் Royal Pharmacy), அரசரத்தின (Chartered accoutant, Canada), திருமதிகள் கமலாதேவி லீலா, ஜீவ (Canada), ஆகியோரின் தாயாரும், திருமதிகள் திலகவதி ஜெயமணி, மாபாகாந்தி, சிறீதேவி [Canada], திருவாளர்கள் பத்மநாதன் [P H. I, A. M. C, Colombo], சபாரணுயகம் (Survey Draughtsman, Trincomalee), தெய்வேந்திரன் (முன்னுள் Ceylon Electricity Board தற்போது Canada) ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னுரின் ஈமைக் கிரியைகள் இன்று (2-5-87) சனிக்கிழமை அன்னுரின் இல்லத்தில் நடைபெற்று காலை 11 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

(சி 8887) தகவல்: இ. சிவரத்தினம்.

### மேதின ஊர்வலம் துப்பாக்சிச் சூடு ஒருவர் பலி

(கொழும்பு)

அரசின் தடையுத்தரவை மீறி கொழும்பில் நேற்றுமே தின ஊர்வலம் சென்ற இடதுசாரி முன்னணி மீது பொலிசார் கண்ணீர்ப் புகைக்குண்டு வீசி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் பலியானுர். பலர் காயமுற்றனர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு மே மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B /81 Eelanadu. P. O. Box Telegram, Eelanadu. Telephone: — 22389 24126.

## மரண அறிவித்தல்

### திரு. வி. செ. இராமநாதன்

இளைப்பாறிய கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் வி செ. இராமநாதன் 1-5-87ல் காலமானுர். அன்னுர் இரத்தினபூபதியின் அன்புக்கணவரும், றவிகாந்தி, ரட்ணகாந்தி, சத்தியநாதன், நித்தியகாந்தி பஞ்சநாதன் ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற றங்கநாதன் (Q C), பத்மநாதன் ஆகியோரின் சகோதரரும், இலங்கை வங்கி லோகநாதனின் மாமனுரும் ஆவார். அன்னுரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: குடும்பத்தினர், நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(சி-8891)

### திருமதி மு. தங்கம்மா

திருமதி முத்தையா தங்கம்மா அவர்கள் 1-5-87ல் காலமானுர். அன்னுர் காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மனைவியும் திருமதி இ அன்னலட்சுமி, திரு. மு பத்மநாபன் (ஆசிரியர் U K.) ஆகியோரின் அன்புத் தாயாரும். க இராசநாயகம் திருமதி ப. லோகநாயகி (U K.) ஆகியோரின் அன்பு மாமியாரும், இ. இராஜேஸ்வரன் (E. B. Creasy & Co., Ltd.) இ. திருத்தணிகாசலம் (Yarl Co-op Tex) திருமதி ப. நளாயினி (Malaysiya), ப, மணிவண்ணன் (India), ப. பிரணவசொரூபி (U.K.), ப. மதிவண்ணன்(U.K), ப ஜெயசொரூபி (U.K.)ஆகியோரின் அன்புப்பாட்டியுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 2-5-87 (இன்று) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்தில் நடைபெறும்.

தகவல்: க. இராஜநாயகம், கேணியடி, திருநெல்வேலி, கிழக்கு.

(சி 8892)